**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No.01/2024** |
| Deposition of witness | : | P.W.2 |
| Name | : | பஞ்சவர்ணம் |
| Father's /Husband Name | : | பெரமாணி |
| Village | : | சீதக்கமங்கலம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 60 |
| Occupation | : | ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 01st day of August 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

அ.சா.1 எனது விஜயப்பிரியா எனது மகள். நான் தற்போது சீதக்கமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 21.12.2017 ம் தேதி நானும் எனது அம்மா பஞ்சவர்ணமும் கும்பகோணத்திலிருந்து மதுரையிலிருந்து நன்னிலம் வழியாக நாகப்பட்டினம் செல்லும் TN 68 N 0806 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் சீதக்கமங்கலம் வீட்டிற்கு செல்வதற்காக வந்து கொண்டிருந்தோம். அப்போது சீதக்கமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகாமையில் விசில் அடித்து இறங்க சொன்னார்கள். நானும் எனது மகள் விஜயப்பிரியாவும் இருக்கையில் இருந்து எழுந்து நின்றோம். அதன் பிறகு பஸ்சை அந்த ஸ்டாப்பில் டிரைவர் நிறுத்தி நாங்கள் இறங்குவதற்குள் பேருந்தை வேகமாக எடுத்துவிட்டார். நான் கீழே விழுந்ததில் எனது இடது பக்க இடுப்பில் காயம் ஏற்பட்டது. அன்றைய தினம் அரசு பேருந்தை இயக்கிய ஓட்டுநர் திருஞானம் ஆஜர் எதிரி தான். காயம்பட்ட என்னை சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் M. M. Ortho தனியார்

மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் பயணம் செய்த பேருந்து சீதக்கமங்கலம் பேருந்து நிறுத்தத்தில் நின்றது. நான் இறங்குவதற்குள் பேருந்தை ஓட்டுநர் எடுத்துவிட்டார் என்ற விபரத்தினை பேலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளனே். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேரும் போது நல்ல நிலையில் தான் இருந்தேன். எனக்கு இடது கை இயற்கையாகவே ஊனம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் பயணம் செய்த பேருந்தில் படிக்கட்டில் கைப்பிடி உள்ளது என்றால் சரிதான். நான் தான் முதலில் பேருந்திலிருந்து இறங்கினேன் என்றாலும் நான் தான் பேருந்து நின்ற பிறகு இறங்கும் போது படிக்கட்டிலிருந்து தவறி கீழே விழுந்துவிட்டேன என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அடிப்பட்டது சம்மந்தமாக நஷ்ட ஈடு கேட்டு கும்பகோணம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எனக்கு காயம்பட்டதற்கு நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக எனது மகள் மூலம் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.01 11:36:11 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`